**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

***8th நவம்பர் / November 2026/ஞா யிறு ஆராதனை / Sunday Service***

Methodist Schools Sunday

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திரு. தாமஸ் பன்னீர் செல்வன்**<br>Mr. Thomas Panneer Selvan |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திரு. தாமஸ் பன்னீர் செல்வன்**<br>Mr. Thomas Panneer Selvan |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு**

*1.* ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு
விசுவாசக் கண்ணால் காண்கிறோம்
நம் பிதா அழைக்கும் பொழுது
நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம்

**இன்பராய் ஈற்றிலே**
**மோட்சக் கரையில் நாம் சந்திப்போம்** *(2)*

*2.* அந்தவான் கரையில் நாம் நின்று
விண்ணோர் கீதங்களைப் பாடுவோம்
துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து
கர்த்தரின் ஆறுதல் அடைவோம் - இன்பராய்

*3.* நம் பிதாவின் அன்பை நினைந்து
அவரில் மகிழ்ந்து பூரிப்போம்
மீட்பின் நன்மைகளை உணர்ந்து
அவரை வணங்கித் துதிப்போம் - இன்பராய்

*4.* அங்கே நம் இரட்சகர் என்றென்றும்
ஆளுகை செய்து வீற்றிருப்பார்
துக்கம் நோ சாவுகள் நீங்கிடும்
தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார் – இன்பராய்

| | |
|---|---|
| ✝ **மாறி வாசித்தல் 45ம் ஞாயிறு**<br>*"சங்கீதம் 137"* | **சபையார் இணைந்து**<br>Congregation |

**"பாபிலோன் ஆறுகள் அருகே"**

Psalter Reading "Psalm 137"

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**அதிசயமான ஒளிமய நாடாம்**

**அதிசயமான ஒளிமய நாடாம்**
**நேசரின் நாடாம், நான் வாஞ்சிக்கும் நாடாம்**
**என் நேசரின் நாடாம், நான் வாஞ்சிக்கும் நாடாம்**

*1.* பாவமில்லாத நாடு ஒரு சாபமும் காணா நாடு *(2)*
நித்திய மகிழ்ச்சி ஓயாகிதம் உன்னதத்தில் ஓசன்னா அல்லேலூயா.

*2.* சந்திர சூரியனில்லை ஆனால் இருள் ஏதும் காணவில்லை *(2)*
தேவகுமாரன் ஜோதியில் ஜோதி நித்திய வெளிச்சமாவார்
என்றும் பகல்

*3.* பிரச்சனை ஏதும் இல்லை பல குழப்பங்கள் ஒன்றுமில்லை *(2)*
மொழி நிறம் ஜாதிபற்று உடையோர் எவருமே அங்கு இல்லை
எல்லாம் சமம்

*4.* பலபல திட்டமில்லை ஆளும் சட்டங்கள் ஏதும் இல்லை *(2)*
காவல் துறை இல்லை கண்டிப்பும் இல்லை மனிதனின் ஆட்சி
இல்லை அன்பே

*5.* கடைத்தெரு ஏதுமில்லை தொழிற்சாலைகள் ஒன்றுமில்லை *(2)*
தரித்திரர் செல்வர் எளியவர் பெரியோர் ஆகிய சிறப்பும் இல்லை
பரமானந்தம்.

*6. ஏசுவின் இரத்தத்தினால் பாவம் கழுவினால் செல்லலாமே (2)*
*இத்தனை பெரிய சிலாக்கியம் இழப்போர் எவருமே இங்கு*
*வேண்டாம் இங்கே வாரீர்.*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **திரு. சாமுவேல் தேவானந்தன்**
Scripture Reading — Mr. Samuel Devanandan
***வெளிப்படுத்தல் 21 : 1 - 7***
Revelations 21 : 1 - 7

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

**<u>பரலோகமே என் சொந்தமே</u>**

***பரலோகமே என் சொந்தமே***
***என்று காண்பேனோ***
***என் இன்ப இயேசுவை என்று***
***காண்பேனோ!***

*1. வருத்தம் பசி தாகம்*
*மன துயரம் அங்கே இல்லை*
*விண் கிரீடம் வாஞ்சிப்பேன்*
*விண்ணவர் பாதம் சேர்வேன்*

*2. சிலுவையில்*
*அறையுண்டேன்*
*இனி நானல்ல இயேசுவே*
*அவர் மகிமையே*
*எனது இலட்சியமே*

*3. இயேசு என் நம்பிக்கையாம்*
*இந்த பூமியும் சொந்தமல்ல*
*பரிசுத்த சிந்தையுடன்*
*இயேசுவை பின்பற்றுவேன்*

*4. ஓட்டத்தை ஜெயமுடன்*
*நானும் ஓடிட அருள் செய்வார்*
*விசுவாச பாதையில்*
*சோராது ஓடிடுவேன்*

*5. பரம சுகம் காண்பேன்*
*பரன் தேசம் அதில் சேர்வேன்*
*இரா பகல் இல்லையே*
*இரட்சகர் வெளிச்சமே*

*6. அழைப்பின் சத்தம்கேட்டு*
*நானும் ஆயத்தமாகிடுவேன்*
*நாட்களும் நெருங்குதே*
*வாஞ்சையும் பெருகுதே*

*7. பளிங்கு நதியோரம்*
*சுத்தர் தாகம் தீர்த்திடுவார்*
*தூதர்கள் பாடிட*
*தூயனை தரிசிப்பேன்.*

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***<u>மனப்பாட வசனம்</u>*** — ***சபையார் இணைந்து***
<u>Memory Verse</u> — Congregation
***வெளிப்படுத்தல் 21 : 3***
Revelations 21 : 3

*3.* ***மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு***
***பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ,***
***மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது,***
***அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும்***
***அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே***
***அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***
Closing Prayer & Benediction

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **/Indicates Congregation standing**